# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## குடாபுத்கமுவ ஸ்ரீ பியதஸ்ஸநாராம விகாரயே
## செயற்சாதனைச் சங்கம் (கூட்டிணைத்தல்)

**குடாபுத்கமுவ ஸ்ரீ பியதஸ்ஸநாராம விகாரயே செயற்சாதனைச் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

*திகாமடுல்ல மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (திருமதி) ஸ்ரீயானி விஜேவிக்கிரம அவர்களால் 2011, சனவரி மாதம் 05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2010, திசெம்பர் மாதம் 06 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப் பணிக்கப்பட்டது*

[ **62 ஆம் சட்டமூலம்** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 05, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## குடாபுத்கமுவ ஸ்ரீ பியதஸ்ஸநாராம விகாரயே செயற் சாதனைச் சங்கம் (கூட்டிணைத்தல்)

## குடாபுத்கமுவ ஸ்ரீ பியதஸ்ஸநாராம விகாரயே செயற்சாதனைச் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

*முன்னுரை.*

"குடாபுத்கமுவ ஸ்ரீ பியதஸ்ஸநாராம விகாரயே செயற் சாதனைச் சங்கம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட நிலையத்துடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக்கொண்டு நடாத்தும் நோக்கத்துக்காக இதற்குமுன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன், சொல்லப்பட்ட சங்கம் எப்பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப்பெயர்.*

**1.** இச்சட்டம், 2011 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, குடாபுத்கமுவ ஸ்ரீ பியதஸ்ஸநாராம விகாரயே செயற்சாதனைச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*குடாபுத்கமுவ ஸ்ரீ பியதஸ்ஸநாராம விகாரையே செயற்சாதனைச் சங்கத்தைக் கூட்டிணைத்தல்.*

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் "சங்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) குடாபுத்கமுவ ஸ்ரீ பியதஸ்ஸநாராம விகாரயே செயற் சாதனைச் சங்கத்தின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) "குடாபுத்கமுவ ஸ்ரீ பியதஸ்ஸநாராம விகாரயே செயற் சாதனைச் சங்கம்" என்ற பெயரின் கீழும் மகுடத்தின்கீழும் இடையறா வழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழு வாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அது அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத்தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்றவும் அது முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3**. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது:-

(அ) விகாரையில் பாதுகாப்பு பராமரிப்பு மற்றும் வளர்ச்சிகளை மேம்படுத்தல் ;

(ஆ) விகாரையில் தங்கியிருக்கும் பிக்குகளின் பாதுகாப்பையும் சேவைகளையும் பூர்த்திசெய்யும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ;

(இ) விகாரைக்குச் சொந்தமான பகுதியில் மத, சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்குக் காரணமான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கல் ;

(ஈ) பௌத்த மதம் நிரந்தரமாக நிலைத்து நிற்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் பௌத்த நெறி வழிமுறைகளை அடிப்படையாகக்கொண்ட பௌத்த தர்மத்தை கடைப்பிடிக்கும் சமூகத்தை உருவாக்க நடவடிக்கை எடுத்தல் ;

(உ) பௌத்த விகாரையொன்றிலிருந்து எதிர்பார்க்கும் அனைத்து கருமங்களையும் ஈடேற்றிக்கொள்வதற்கு அவசியமான ஒழுங்குமுறைகளை உருவாக்கல் ;

(ஊ) அநாதைகள், ஊனமுற்றோர் முதியோர் மற்றும் நோயாளிகள் மற்றும் இடம்பெயர்ந்தோரின் நலன்புரி சேவைகள், பயிற்சி மற்றும் புனர்வாழ்வு போன்றவற்றின்பொருட்டு நிறுவனங்களை நிறுவுதலும் கொண்டுநடாத்துதலும் ;

(எ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையானதும், உசிதமானதும், இடைநேர் விளைவானதுமான எல்லாக் கருமங்களையும் காரியங்களையும் செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**4.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் பிரதான தலைவராக பதவி அதிகாரத்தின் பிரகாரம் நியமனம் பெறும் விகாரையின் தலைமைக் குருவானவரும் பொதுக் கூட்டமொன்றில் தேர்ந்தெடுக்கப்படும் உபதலைவர், செயலாளர், உதவிச் செயலாளர், பொருளாளர் மற்றும் ஐந்து உறுப்பினர்களையும்கொண்ட முகாமைச்சபை ஒன்றினால் (இதனகத்துப்பின்னர் “சபை” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இச்சட்டத்தினதும் ஏனைய ஏற்பாடுகளுக்கும் அமையவும் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகித்த சங்கத்தின் முகாமைச் சபையே கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைச்சபையாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.

**5.** இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைவாக, கூட்டுத்தாபனமானது பின்வரும் தத்துவங்களை உடையதாதல் வேண்டும் :-

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக ஏதேனும் அசைவற்ற ஆதனத்தைக்கொள்ளுதல், வைத்திருத்தல், குத்தகைக்குக் கொடுத்தல் அல்லது வாடகைக்கெடுத்தல், ஈடுவைத்தல், அடைமானம் வைத்தல், விற்றல் அத்துடன் கொடுத்துமாற்றல், வேறுவகையில் பாராதீனப்படுத்தல் பாரபந்தத்திற்குட்படுத்தல் அல்லது கையுதிர்த்தல் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்காக அல்லது தத்துவங்களைப் பிரயோகிப்பதற்காக அவசியமாகவிருக்கக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது உடன்படிக்கைகளையும் நேரடியாகவோ அல்லது நிறுவனத்தினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர்மூலமோ அல்லது முகவர்மூலமோ செய்துகொள்ளுதலும் புரிதலும் அல்லது நிறைவேற்றுதலும் ;

(இ) காசாக அல்லது பொருளாகக் கொடைகளையும், நன்கொடைகளையும் ஏற்றுக்கொள்ளுதல் ;

(ஈ) அதன் நிதிகளை முதலீடுசெய்தலும் நம்பிக்கைப் பொறுப்புக்களை உருவாக்குதலும், நிருவகித்தலும் ஏதேனும் வங்கியில் நடைமுறை வைப்பு அத்துடன் சேமிப்புக் கணக்குகளைப் பேணுதலும் ;

(உ) புத்தகங்களையும், சஞ்சிகைகளையும், பருவ இதழ் களையும் ஏனைய நூல்களையும் வெளியிடுதல் அல்லது வெளியிடச் செய்தல் அத்துடன் நூலகங்கள், புத்தகக் கடைகள், அச்சகங்கள் என்பவற்றைத் தாபித்தலும் பேணுதலும் ;

(ஊ) கூட்டுத்தாபனம் தகுதியென எண்ணக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய பிணைப்பொறுப் பின்மீதும் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காகப் பணம் முற்பணமாகக் கொடுத்தலும் அல்லது கடன் கொடுத்தலும் கடன்பெறுதலும் ;

(எ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்று வதற்குத் தேவைப்படும் அலுவலர்களையும் சேவை யாளர்களையும் நியமித்தல், தொழிலுக்கமர்த்துதல், இடமாற்றுதல், அவர்களின்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு பிரயோகித்தல் அத்துடன் அவர்களைப் பதவிநீக்குதலும், அவர்களின் சேவைக்காலத்தையும் நிபந்தனைகளையும் விதந்துரைத்தலும் ;

(ஏ) பொதுவாக, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு அல்லது எய்துவதற்கு அவசியமான வாறானவையும் அதன் இடைநேர்விளைவானவையும் அல்லது அதற்கு உகந்தவையுமான அத்தகைய எல்லாச் செயல்களையும் காரியங்களையும் செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6**. (1) இரண்டு வாரகால அறிவித்தலின்மூலம் கூட்டப்பட்ட உறுப்பினர்களின் பொதுக்கூட்டம் எதிலும் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மைகொண்டு உறுப்பினர்களைச் சேர்த்தல் விலக்கல் பதவிதாங்குநர்களின் அதிகாரம் நடத்தை மற்றும் கடமைகள் தொடர்பிலும் நிருவாகச் சபை கூட்டத்தின்

அலுவல்களைக் கொண்டுநடாத்துவதில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடைமுறை பற்றியும் கூட்டுத்தாபனத்தின் அலுவலர்கள் சேவையாளர்களது நடத்தை, கடமைகள், பணிகள் அத்துடன் பொதுவாக கூட்டுத்தாபனத்தின் அலுவல்களின் முகாமைத்துவதற்காகவும் இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாக விராத விதிகளைக் காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டதும் அதேபோன்ற கூட்டமொன்றில் அதேமுறையில் அவை மாற்றப்படலாம் அவற்றுக்கு எதுவும் சேர்க்கப்படலாம். அவை திருத்தப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(2) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று வலுவிலுள்ள விதிகள் இச்சட்டத்தினது அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத வரையில் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

7. (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் கூட்டுத்தாபனத்துக்காகவும் கூட்டுத்தாபனத்தின் கணக்காலும் கொடை, அன்பளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு அல்லது கட்டணங்களாகக் கிடைக்கக்கூடிய எல்லாப் பணங்களும் முகாமைச்சபை தீர்மானிக்கும் ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்

(2) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தைப் புனரமைப்பதற்காகவும் சீர்திருத்துவதற்காகவும் அபிவிருத்தி செய்வதற்காகவும் பேணுவதற்காகவும் ஏதேனும் பெறுமானத்தேய்வு அல்லது ஒதுக்கு அல்லது கடனாழ் நிதியத்தைக் கூட்டுத்தாபனம் உருவாக்கலாம்.

(3) இச்சட்டத்தின்கீழ் கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்படும் எல்லாச் செலவினங்களும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**8**. கூட்டுத்தாபனத்தின் இலச்சினை தலைவருடன் செயலாளர் அல்லது பொருளாளர் ஆகிய இருவரில் ஒருவர் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாசனம் எதிலும் பொறிக்கப்படுதல் ஆகாதென்பதுடன் அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்குச் சான்றாக அச்சாசனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். அப்படிக் கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்.

**9**. (அ) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(ஆ) கூட்டுத்தாபனமானது, அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குகள் வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(இ) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒரு தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது –

(i) இலங்கைப் பட்டயக்கணக்காளர் நிறுவனத்தின் உறுப்பினராகவும் அல்லது சட்டத்தால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவனத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் உள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ii) கணக்காளர் குழுமமொன்றில் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் உறுப்பினர் ஒருவராக அல்லது

சட்டத்தால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவனத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவனத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று,

எனப் பொருள்படும்.

நல்லெண்ணத்துடன் செய்யப் பட்ட செயல் களுக்கான நட்டோத்தர வாதம்.

**10.** ஆள் எவரும் இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் சுமத்தப்பட்ட தத்துவங்களைப் பின்பற்றி அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளைக் கொண்டுநடாத்துகின்ற நோக்கத்திற்காக நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட வேண்டுமெனக் கருதப்படுகின்ற ஏதேனும் செயலுக்காக ஏதேனும் துடர்ச்சியில் அல்லது ஏதேனும் வழக்கு நடவடிக்கைகளில் பொறுப்பாளியாக மாட்டார்.

குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணல்.

**11.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும் ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக் கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும், இச்சட்டத்தில் குறிப் பிடப்பட்டவர்களும் அவர்கள்மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**12.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்